**Starting time 11.16 A.M.**

# IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE TO DEAL WITH L.A.O.P. CASES, ARAKKONAM.

## O.S. No. 54 /2019

Deposition of **D.W.3** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Vennila, Sheristadar of this court, on 20.07.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **ராமன்** Father's Name : **திருநாவுக்கரசு**

Address : எண்.2/23, பெரியதெரு, ரெட்டிவளம் கிராமம், நெமிலி வட்டம்.

Age : 60

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் ரெட்டிவளம் கிராமத்தில் தான் வசித்து வருகிறேன். என்னை சாட்சி அளிக்க யார் அழைத்தது என்றால், பிரகாஷ் அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கை யார், யார் மீது தாக்கல் செய்தது என்றால், சீனிவாசன், பிரகாஷ் மீது தாக்கல் செய்துள்ளார். என்ன சாட்சியம் அளிக்க வேண்டும் என்று பிரகாஷ் சொன்னாரா என்றால், இல்லை, தெரிந்ததை சொல்ல சொன்னார்.

2. பிரகாஷ் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிய ஆவண எழுத்தர் யார் என்றால், குப்பம் பகுதியை சேர்ந்த பாய் ஒருவர் எழுதினார், அவர் தற்போது காலமாகிவிட்டார். முத்திரை தாள் யார் வாங்கினார் என்று தெரியுமா என்றால், தெரியாது. செட்டில்மெண்ட் பத்திரத்தை பதிவு செய்த போது யார், யார் இருந்தது என்றால், நான், அல்லிராணி மற்றும் பழனி ஆகிய 3 பேர் இருந்தோம்.ங

3. செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய பிறகு அதுசம்மந்தமாக வாதி சீனிவாசன்

அறிவிப்பு அனுப்பிய விவரம் தெரியுமா என்றால், தெரியாது. நான் சொல்வது பொய் என்றும், செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய பிறகு, வாதி என்னிடம் வந்து, அது பற்றி கேட்டபோது, நான் சமாதானம் செய்து வைக்கிறேன் என்றும், செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவும் வைக்கின்றேன் என வாதியிடம் நான் சொன்னேன் என்றால், சரியல்ல.

4. என்னை சாட்சி கையெழுத்து செய்ய அல்லிராணி அழைத்து செல்லவில்லை என்றும், பிரகாஷ் தான் சாட்சி கையெழுத்து செய்ய அழைத்து சென்று ஆவணத்தை எழுத வைத்துள்ளார் என்றும், அவர் எனது நண்பர் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. செட்டில்மெண்ட் பத்திரம் எழுதியதற்கான முத்திரை தாளை அல்லிராணி வாங்கவில்லை என்றும், முத்திரை தாள் விற்பனையாளரை அழைத்து விசாரித்தால் உண்மை தெரியும் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

<u>**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

5. எந்த ஆவணத்தை பொறுத்து நான் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், செட்டில்மெண்ட் பத்திரம் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துளேன். அந்த ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால், தேதி நினைவில் இல்லை, ஆனால் வருடம் 2011 ஆகும். என்ன கிழமை என்று தெரியுமா என்றால், தெரியாது.

6. செட்டில்மெண்ட் பத்திரம் எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால், காவேரிப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு

செய்யப்பட்டது. எத்தனை மணிக்கு அங்கு நான் போனேன் என்றால், காலை சுமார் 10.45 மணிக்கு போனேன். நான் கையெழுத்து செய்த செட்டில்மெண்ட் பத்திரம் கையில் எழுதப்பட்டிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்றால், தட்டச்சு செய்யப்பட்டிருந்தது.

7. நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் காலை 10.45 மணிக்கு போனதாக சொல்வதால், அந்த நேரத்திலேயே அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுவிட்டதா என்றால், அரை மணி நேரம் பொறுத்து தான் பதிவு செய்யப்பட்டது. ஆவணத்தில் உள்ள வாசகங்களை எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால், தெரியாது.

8. அல்லிராணி எழுதிய செட்டில்மெண்ட் பத்திரத்தில் எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால், ஆவணத்தில் ஒரு கையெழுத்தும், சார் பதிவாளர் அலுவலகத்தில் இரண்டு கையெழுத்தும் செய்தேன். அல்லிராணி எத்தனை கையெழுத்து செய்தார் என்றால், கையெழுத்து செய்தார், ஆனால் எத்தனை கையெழுத்து என்று தெரியவில்லை.

9. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்றுக் கொள்வதாக கூறி பிரகாஷ் கையெழுத்து செய்தாரா என்றால், இல்லை, அவர் அங்கு வரவே இல்லை. சாட்சி கையெழுத்தை செய்ததை தவிர அந்த ஆவணம் எங்கு வாங்கப்பட்டது, எங்கு தயாரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

10. பிரகாசை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால், பிரகாஷின் அம்மாவின் வீட்டின் எதிரே எனது தங்கையை திருமணம் செய்துக் கொடுத்துள்ளோம், அதனால் அங்கு போக வரும் போது அவரது அம்மாவை தெரியும், அந்த வகையில் பிரகாசையும் தெரியும்.

11. செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரத்தை சாட்சி கையெழுத்து செய்வதற்கு முன்பு சொன்னார்களா அல்லது

கையெழுத்து செய்து ஆவணம் பதிவு செய்த பிறகு சொன்னார்களா என்றால், சாட்சி கையெழுத்து செய்வதற்கு முன்பே படித்து காண்பித்தார்கள்.

12. அல்லிராணியும், நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால், சரிதான். எனது வீட்டில் இருந்து எவ்வளவு தூரத்தில் அவரது வீடு உள்ளது என்றால், 30 வீடு தள்ளி உள்ளது. பிரகாஷிடம் தனிப்பட்ட ஆதாயத்தை பெற்றுக் கொண்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வாதி மீது எனக்குள்ள மனஸ்தாபம் காரணமாக அவருக்கு எதிராகவும், பிரகாஷிக்கு ஆதரவாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. செட்டில்மெண்ட் பத்திரம் எழுத வைக்க பிரகாஷ் தான் என்னை அழைத்து சென்றார் என்றால், சரியல்ல, ஆவணம் எழுதிய விவரத்தையே 3 நாட்கள் கழித்து தான் நான் பிரகாஷிடம் சொன்னேன்.

1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

2–ம் பிரதிவாதி தரப்பில் யாரும் ஆஜராகாததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**Ending time : 11.42 A..M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.07.20 18:23:56 +0530